


**07.03.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. உணவு பாதுகாப்பு பிரச்சார இயக்கத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று மாலை குஜராத் மாநிலம் சூரத்தில் தொடங்கிவைக்கிறார்.

2. நாட்டின் வளர்ச்சியிலும், பாதுகாப்பிலும் மத்திய தொழில் பாதுகாப்பு படையினரின் பங்களிப்பு அளப்பரியது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

3. பிரதமரின் மக்கள் மருந்தக திட்டம் ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளதாக மத்திய சுகாதார துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா கூறியுள்ளார்.

4. தமிழ்நாட்டில் 70 கோடி ரூபாய் மதிப்பிலான வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சித்திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.

5. ஆர்லியன்ஸ் மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் ஆயுஷ் ஷெட்டி - டென்மார்க்கின் ராஸ்மஸை இன்று எதிர்கொள்கிறார்.

<u>இனி விரிவான செய்திகள்</u>

❖❖❖❖❖❖❖❖

<u>பிரதமர்</u>

பிரதமர் திரு.நரேந்திரமோடி தாத்ரா, நாகர்ஹவேலி சில்வாசா மற்றும் டாமன் டையூ பகுதிகளில் 2 ஆயிரத்து 580 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு நலத்திட்டங்களை தொடங்கி வைப்பதுடன் புதிய திட்டப்பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டுகிறார்.

தொடர்ந்து குஜராத் மாநிலம் சூரத்தில் இன்றுமாலை உணவு பாதுகாப்பு பிரச்சார இயக்க நிகழ்வில் பங்கேற்கும் அவர், கரீப் கல்யாண் அன்னயோஜனா திட்டத்தின் கீழ் 2 லட்சம் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்குகிறார்.

❖❖❖❖❖❖❖❖

அமித்ஷா

நம்நாடு இன்னும் 2 ஆண்டுகளுக்குள் 3-வது பெரிய பொருளாதார நாடாக வளர்ச்சி பெறும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா தெரிவித்துள்ளார்.

ராணிப்பேட்டை மாவட்டம் தக்கோலத்தில் மத்திய தொழில் பாதுகாப்பு படையின் 56-வது நிறுவனநாள் கொண்டாட்டங்களை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், தேச வளர்ச்சியிலும், நாட்டின் முக்கிய பகுதிகளிலும் மத்திய தொழில் பாதுகாப்பு படையினரின் பங்களிப்பு அளப்பரியது என்று புகழாரம் சூட்டினார்.

நாட்டு மக்களை பாதுகாப்பதில் இப்படையினரின் அர்ப்பணிப்புமிகு சேவையையும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

நாட்டிலுள்ள 250 துறைமுகங்கள் தொழில் பாதுகாப்பு படையினரின் பாதுகாப்பின் கீழ் இருப்பதாகவும், சர்வதேச தரத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

மத்திய தொழில் பாதுகாப்பு படையின் பெண் ஊழியர்களுக்கு 124 குடியிருப்புகள் வழங்கப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

தற்போதுள்ள பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மத்திய அரசு பல்வேறு மேம்படுத்தப்பட்ட நவீன நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

வளர்ச்சியடைந்த பெரும் தேசமாக நம்நாட்டை உருவாக்குவதில் மத்திய தொழில் பாதுகாப்பு படையினர் சிறப்பான பங்களிப்பை வழங்குவார்கள் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

2019-ம் ஆண்டிலிருந்து தொழில் பாதுகாப்பு படை நிறுவனநாளை நாட்டின் பிறபகுதிகளிலும் நடத்த மத்திய அரசு முடிவு செய்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

மருத்துவ படிப்புகளை தமிழ்மொழியிலேயே பயிற்றுவிக்க வேண்டும் என்ற மத்திய அரசின் கோரிக்கையை கடந்த 2 ஆண்டுகளாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் செயல்படுத்தவில்லை என்று குறை கூறினார்.

நாட்டின் வளர்ச்சியில் தமிழகத்திற்கு மிகப்பெரிய பங்களிப்பு உள்ளதாக கூறியஅவர், ராஜாதித்திய சோழனின் வீரத்தையும், பெருமையையும் அங்கீகரிக்கும் வகையில் தக்கோலம் பிராந்திய தொழில் பாதுகாப்பு படை பயிற்சி மையத்திற்கு அவரது பெயர் சூட்டப்பட்டதாக கூறினார்.

மேலும் தொழில் பாதுகாப்பு படை வீரர்கள் ஹிந்தி மற்றும் ஆங்கிலத்திலேயே தேர்வு எழுதியதாகவும், வரும் காலங்களில் தமிழ், வங்கமொழிகளிலும் இத்தேர்வுகளை எழுத மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக குறிப்பிட்டார்.

முன்னதாக திரு.அமித்ஷா தொழில் பாதுகாப்பு படையினரின் அணிவகுப்பை பார்வையிட்டதோடு, இன்னுயிர் ஈந்த 127 தொழில் பாதுகாப்பு படையினருக்கு அஞ்சலி செலுத்தினார்.

மேற்கு மற்றும் கிழக்கு கடலோர பகுதிகளில் கடலோர சைக்ளத்தான் பேரணி உள்ளிட்ட விழிப்புணர்வு நிகழ்வுகளை தொடங்கிவைத்தார்.

மேற்கு வங்கத்திலிருந்து தொடங்கிய இந்த பேரணி கடலோர பாதுகாப்பு, உள்ளூர் மக்களின் ஒத்துழைப்பை வலியுறுத்தி 6 ஆயிரத்து 200 கிலோமீட்டர் தொலைவில் பயணித்து வரும் 31-ம் தேதி கன்னியாகுமரியை சென்றடைகிறது.

இந்நிகழ்வின் போது சிறப்பாக சேவையாற்றிய 22 தொழில்பாதுகாப்பு படை வீரர்களுக்கு பதக்கங்களையும் அமைச்சர் வழங்கினார்.

மத்திய அமைச்சர் டாக்டர் எல்.முருகன், பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு.அண்ணாமலை உள்ளிட்டோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியின் முத்தாய்ப்பாக மத்திய தொழில் பாதுகாப்பு படையினரின் சாகச நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

❖❖❖❖❖❖❖

பிரதமர் - மருந்தகம்

பிரதமரின் மக்கள் மருந்தக தினம் இன்று கொண்டாடப் படுகிறது.

தரமான மருந்துகளை மலிவு விலையில் மக்களுக்கு வழங்கி ஆரோக்கியமான, நலமிகு இந்தியாவை படைப்பதில் மத்திய அரசு உறுதியுடன் இருப்பதை இத்தினம் பறைசாற்றுவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தமது சமூக வலைதளப்பதிவில் தெரிவித்துள்ளார்.

❖❖❖❖❖❖❖

மருந்தகம் நட்டா

பிரதமரின் மக்கள் மருந்தக திட்டம் அனைவருக்கும் சுகாதார வசதிகளை வழங்குவதாக மத்திய சுகாதார துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா கூறியுள்ளார்.

நாடுமுழுவதும் செயல்படும் 15 ஆயிரம் மக்கள் மருந்தகங்கள் மூலம் நாள் ஒன்றுக்கு 10 லட்சம் பேர் பயனடைந்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மிக தரமான மருந்துகளும், மிக குறைந்த விலையில் வழங்கப்படுவதாக எடுத்துரைத்த அவர், இதன்மூலம் மக்கள் நலனில் மாபெரும் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

மக்கள் அனைவருக்கும் தேவையான ஆரோக்கியத்தை உறுதிசெய்யும் இந்த சிறப்பு திட்டத்தை பயன்படுத்தி நலமிகு தேசமாக நம்நாட்டை மேம்படுத்த திரு. ஜே.பி.நட்டா அழைப்பு விடுத்துள்ளார்.

மத்திய சுகாதார குடும்பநலத்துறை இணையமைச்சர் திருமதி. அனுப்பிரியா பட்டேலும் இத்திட்டத்தின் சிறப்புகளை எடுத்துரைத்ததோடு கோடிக்கணக்கான மக்களின் வாழ்வாதாரம் இதனால் மேம்பட்டிருப்பதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

மருந்தகம் - முருகன்

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் விடுத்துள்ள செய்தியில், பிரதமரின் தொலைநோக்கு பார்வை கொண்ட இத்திட்டத்தால் ஆரோக்கியமான சுயசார்பு இந்தியாவின் ஆளுமை உறுதி செய்யப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த திட்டத்தால் தேசத்தின் சுகாதார பிரிவில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதோடு, நாடுமுழுவதும் லட்சக்கணக்கான மக்கள் பயன்பெற்று வருவதாக கூறினார்.

மக்கள் மருந்தக பயனாளிகள் எமது செய்தியாளர்களிடம் தங்களது கருத்துக்களை பகிர்ந்து கொள்கையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை சார்பில் 71 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 புதிய திட்ட பணிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி மூலம் 39 கோடியே 75 லட்ச ரூபாய் மதிப்பிலான 3 முடிவடைந்த பணிகளையும் முதலமைச்சர் தொடங்கிவைத்தார்.

சென்னை பெருநகர காவல்துறை சார்பில் பெண்களின் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையில் **QR** குறியீட்டுடன் காவல் உதவி எண் கொண்ட ஆட்டோ ரிக்ஷாக்களின் செயல்பாட்டையும் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

சோழிங்கநல்லூரில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர்தர மின் மேலாண்மை மையத்திற்கும் முதலமைச்சர் இன்று அடிக்கல் நாட்டினார்.

இதன்மூலம் 500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

மகளிர் தினம் செய்திக்குறிப்பு

தமிழகத்தில் மகளிர் பயனடையும் வகையில் இலவச பேருந்து பயண திட்டம், மகளிர் உரிமை தொகை, அரசு பணிகளில் 40 சதவிகித இட ஒதுக்கீடு, அரசு துறைகளில் பணிபுரியும் மகளிருக்கு 12 மாதங்கள் மகப்பேறு விடுப்பு உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

மகளிர் தினம் நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி தமிழகஅரசு இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் பல்வேறு துறைகளில் பெண்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், மகளிரின் நலனை கருத்தில் கொண்டு புதிய திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖

உதயநிதி

அரசின் திட்டங்கள் மக்களுக்கு விரைவாகவும், எளிதாகவும் சென்றடைவதை உறுதிசெய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்து ஆட்சியரகத்தில் அனைத்து துறை அதிகாரிகளுடன் ஆய்வுமேற்கொண்ட அவர், திட்டங்களை விரைந்து நிறைவேற்றி பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர அறிவுறுத்தினார்.

❖❖❖❖❖❖❖

பொன்முடி

வனவிலங்குகளையும் இயற்கையையும் பாதுகாக்க தமிழக அரசு உறுதி பூண்டுள்ளதாக மாநில வனத்துறை அமைச்சர் திரு.க.பொன்முடி தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமை செயலகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், வன விலங்குகள் வேட்டையாடப்படுவதை தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுகக்கப்பட்டு வருவதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

செல்வபெருந்தகை

தேனி மாவட்டத்தில், தமிழ்நாடு சட்டமன்ற பேரவை பொது கணக்கு குழுவினர், அதன் தலைவர் திரு. செல்வபெருந்தகை தலைமையில் இன்று பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகள் தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளவுள்ளனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

வேலைவாய்ப்பு முகாம்

பெரம்பலூர், தென்காசி, நீலகிரி, புதுக்கோட்டை, உள்ளிட்ட மாவட்டங்களில் நாளை தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறுகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெறும் வேலைவாய்ப்பு முகாம் குறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

இருவரி

குடும்ப அட்டைகளில் பெயர்சேர்த்தல், நீக்கம், முகவரி மாற்றம் உள்ளிட்ட திருத்தங்களை மேற்கொள்ள ஏதுவாக நாளை சிறப்பு குறைதீர்முகாம் நடைபெற உள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

சேலம் மாவட்டம் பாலமலையில் புதிய தார்சாலை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் பிருந்தாதேவி இன்று ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் அங்குள்ள அரசு பழங்குடியினர் உண்டு உறைவிடப்பள்ளியில் ஆய்வுமேற்கொண்ட ஆட்சியர் மாணாக்கருக்கு வழங்கப்படும் உணவுகளின் தரம் குறித்து கேட்டறிந்தார்.

சிவகங்கை மாவட்டத்தில் பெண் குழந்தைகளை பாதுகாப்போம்! பெண்குழந்தைளுக்கு கற்பிப்போம்! திட்டத்தின் 10-ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு கையெழுத்து இயக்கம் மற்றும் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷாஅஜித் தொடங்கிவைத்தார்.

நாடுமுழுவதும் இளநிலை மருத்துவ படிப்பிற்கான நீட் நுழைவு தேர்வுக்கு விண்ணப்பிக்க இன்று கடைசிநாளாகும்.

❖❖❖❖❖❖❖

கோவில்

கடலூர் மாவட்டம் விருத்தாச்சலம் அருள்மிகு விருத்தாம்பிகை, பாலாம்பிகை உடனுறை விருத்தகிரீஸ்வரர் திருக்கோவில் மாசிமகத்தின் 5-ம் திருநாளான இன்று பஞ்சமூர்த்திகள் திருவீதிஉலா இன்று நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

ஃபிரான்ஸில் நடைபெறும் ஆர்லியன்ஸ் மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதி போட்டியில் இந்தியாவின் ஆயுஷ் ஷெட்டி – டென்மார்க்கின் ராஸ்மஸ் ஜென்கியை இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖